# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2144 - 2019 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2019.10.04

*2144 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1650 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 1651 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1667 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயானப் பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II அத்தியாயத்தின் 5 (I) இன் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர் ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5 (I) பிரிவிற்கமைய வடமேல் மாகாண சபையின் ஆளுநராக கடமையாற்றும் திரு. சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கு உட்பட்டு அமைந்துள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மயானத்தில் இறந்தவர்களைப் புதைத்தல் அல்லது தகனம் செய்யும் வகையில் பொது மயானமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.*

*சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார,*
*வடமேல் மாகாண ஆளுநர்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*மாலிகாவ,*
*குருநாகல்.*
*2019, ஓகத்து 20.*

**அட்டவணை**

*வடமேல் மாகாண குருநாகல் மாவட்டத்தின் தம்பதெனிய ஹத்பத்துவ உடுகஹ வடக்கு கோரளையின் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவின் கிவுள்கல்ல கிராம அலுவலர் பிரிவின் மிணிகுகுல எனும் மெடியன்கல என்று அழைக்கப்படும் மெடியகனே பள்ளிக்கு உரித்துடைய காணியில் இருந்து 2017 யூலை மாதம் 18 ஆந் திகதியன்று அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு.கே.ஏ. அமரதுங்க அவர்களினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 12220 இனைக் கொண்ட திட்ட வரைபடத்திற்கு ஏற்ப வடக்காக இக் காணியின் எஞ்சிய பகுதியும், கிழக்காக இக் காணியின் எஞ்சிய பகுதியும், தெற்காக கிரிஉல்ல - குருநாகல் நெடுஞ்சாலையும், மேற்காக இக் காணியின் எஞ்சிய பகுதியும் எல்லையாகக் காணப்படும் பதினைந்து பேர்ச் (15 பே.) பாரிய காணி.*

*10 - 53/1*

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயானப் பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II அத்தியாயத்தின் 5 (I) இன் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இனைக் கொண்ட பொது மயானம் மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் II அத்தியாயத்தின் 5 (I) பிரிவிற்கமைய வடமேல் மாகாண சபையின் ஆளுநராக கடமையாற்றும் திரு. சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கு உட்பட்டு அமைந்துள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மயானத்தில் இறந்தவர்களைப் புதைத்தல் அல்லது தகனம் செய்யும் வகையில் பொது மயானமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.*

*சுதசிங்க முதியன்சேலாகே பேஷல ஜயரத்ன பண்டார,*
*வடமேல் மாகாண ஆளுநர்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*மாலிகாவ,*
*குருநாகல்.*
*2019, ஓகத்து 20.*

**அட்டவணை**

*வடமேல் மாகாண குருநாகல் மாவட்டத்தின் தம்பதெனிய ஹத்பத்துவ உடுகஹ வடக்கு கோரளையின் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவின் பஹமுனே கிராம அலுவலர்ப் பிரிவில் அமைந்துள்ள 'அத்கால வத்தை' எனும் காணியில் இருந்து 2016 ஆம் ஆண்டு பெப்புருவாரி மாதம் 28 ஆந் திகதியன்று நில அளவையாளர் திரு. ஆர்.எம். புஷ்பதேவ அவர்களினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 15447 எனும் திட்ட வரைபடத்திற்கு ஏற்ப காணித் துண்டு இலக்கம் ''01'' ஆனது வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கிற்கும், திரு. பிரசன்ன ஒபேசேகர அவர்களுக்கு உரித்துடைய அத்கால வத்தையின் ' எஞ்சிய பகுதியும், தெற்கிற்கு திரு. எம்.ஐ.எம். அம்ஜத் அவர்களுக்கு உரித்துடையதாகக் கூறப்படும் காணியின் எல்லையாகக் காணப்படும் 02 றூட் 2.5 பேர்ச். இனையும் கொண்ட பாரிய காணி.*

*10-53/2*

---

## துணை விதிகள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 126 (IX) மற்றும் 126 (XI) ஆம் பிரிவுகளினால் பிங்கிரிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி உரிய பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட இங்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள பன்றி வளர்ப்பு காரணமாக பொது மக்கள் முகம் கொடுத்துள்ள இன்னல்களை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியினை 2019.03.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்ட இலக்கம் 05 - 11, (இ) இற்கான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் பிரதேச சபை பிரிவின் 123 ஆம் பிரிவுப்படி உரிய துணை விதி, வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜயரத்ன பண்டார ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

பேசல ஜயரத்ன பண்டார,
வடமேல் மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
குருநாகல்,
*2019, ஓகத்து 20.*

**பன்றி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதி**

1. பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் பன்றி இறைச்சிக்காக பன்றி வளர்த்தல் மற்றும் பன்றி குட்டிகளை இனப்பெருக்கம் செய்வதற்காக, பன்றிகளுக்கான உணவு தயாரிப்பதற்காக, பன்றி இறைச்சி தயாரிப்பதற்கான இடங்களை பராமரித்தல் கழிவுப் பொருட்களை வெளியேற்றல் மற்றும் பொது தெருக்களில் பன்றிகளை கொண்டு செல்வதனால் ஏற்படுகின்ற பொது மக்களின் பீடனையினை தடுப்பதற்காகவும் பொது மக்களின் சுகாதாரத்தினை பேணுவதற்காக ஏற்பாடுகள் செய்ய இத்துணை விதி விதிக்கப்படுகின்றது.

2. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 (1) உடன் வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) மற்றும் 126 (xi) பிரிவுகளின் கீழ் இத் துணை விதி விதிக்கப்படும்.

3. இத்துணை விதி பிங்கிரிய பிரதேச சபையில் பன்றி வளர்ப்புத் தொழிலினால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை நிறுத்துதல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாப்பதற்கான துணை விதி என்று அறிமுகம் செய்யப்படும்.

4. பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் பன்றி இறைச்சி பெற்றுக் கொள்வதற்காக பன்றி குட்டிகளை இனப் பெருக்கம் செய்வதற்காக பன்றிக்கான உணவு தயாரிப்பதற்காக, பன்றி இறைச்சி தயாரிப்பதற்கான இடங்களை பராமரிக்கும் எல்லோரும் இதற்காக இத் துணை விதியின் I ஆம் அட்டவணையின் கீழான உரிமப்பத்திரம் ஒன்றினை சபையின் தலைவரிடத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. 4 ஆம் பிரிவின் கீழான உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற யாவரும் இத் துணை விதியில் II ஆம் அட்டவணைக்கு அமைய சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரிப் படிவம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

6. இத்துணை விதியின் கீழான உரிமப் பத்திரத்திற்காக விண்ணப்பப் படிவத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் சபையால் காலத்திற்கு காலம் தீர்வு உடன்படிக்கை மூலம் தீர்மானித்து வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படும் கட்டணமாக வேண்டும்.

7. இத்துணை விதியின் கீழான விதிகளை செயற்படுத்தல் பற்றி தலைவருக்கு ஆலோசனை மற்றும் பரிந்துரை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் உள்ளடங்கிய குழுவாக வேண்டும்.

(அ) சபையின் செயலாளர் - தலைவர்
(ஆ) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்
(இ) மிருக வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்
(ஈ) சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - குழுவின் உறுப்பினர்
(உ) சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் - குழுவின் உறுப்பினர்
(ஊ) உரிய பிரதேசத்தில் பிரதேச செயலாளரின் பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்

8. 4 ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உரிமப்பத்திரத்திற்காக கோரிக்கை விடுக்கின்ற யாவரும் அதற்காக கீழ்க் காணப்படும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) உரிமப்பத்திரத்திற்காக கோரிக்கை விடுக்கின்ற சுற்றாடலுக்கு உரிய எல்லா கட்டமைப்புகளும் தலைவரினால் அனுமதிக்கப்பட்ட குறித்த வரைபுத் திட்டத்திற்கு இணங்க கட்டப்பட்ட கட்டமைப்பாக இருக்க வேண்டும்.

(ஆ) ஒரு கட்டிடத்தில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய பன்றிகளின் எண்ணிக்கையினை மிருகங்களின் வயதெல்லையினைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டியதுடன் வயது வந்த மிருகம் சம்பந்தமாக ஒரு பன்றிக்காக 10 சதுர ஆகக் குறைந்த இடவசதினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(இ) எல்லா சுற்றாடல்களுக்கும் உரிய கட்டமைப்பு போதியளவிலான உயரத்தில் மூடப்பட்டிருக்க வேண்டியதுடன், மூடப்பட வேண்டிய உயரத்தின் அளவு கட்டமைப்பு சதுர அடியினை கவனத்தில் கொண்டு 7 ஆம் பிரிவின் கீழான குழுவின் பரிந்துரை படி தலைவரினால் விதிக்கப்பட வேண்டும்.

(ஈ) உரிமப்பத்திரத்திற்கமைய சுற்றாடலினுள் வியாபாரத்தினை அல்லது தொழிலுக்கான எல்லா கட்டமைப்புகளும் குறைந்தபட்ச தூரம் வீட்டிற்கு 15 மீற்றர் அளவிலான தூரத்தில் அமைப்பதுடன் பொது சுற்றாடல் அல்லது அக்கம்பக்கத்து காணியின் அண்மித்து இருக்கையில் அதற்குரிய எல்லை வேறு பொருத்தமான பாதுகாப்பு அரணினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடலினுள் பன்றி கூட்டில் இருந்து அது அமைந்துள்ள காணியின் எல்லை வரையிலான குறைந்தபட்ச தூரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்.

I. வீட்டு மட்டத்தில் பன்றி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 10 மீற்றராக வேண்டும்.
II. சிறு அளவிலான பண்ணைக்காக பன்றி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 15 மீற்றராக வேண்டும்.
III. மத்திய அளவிலான பண்ணைக்காக பன்றி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 20 மீற்றராக வேண்டும்.
IV. பெரிய அளவிலான பண்ணைகளுக்காக பன்றி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 50 மீற்றராக வேண்டும்.
V. பன்றிக் கூடுகளுக்கிடையிலான இடைவெளி குறைந்தபட்ச தூரம் 2 மீற்றராக இருக்க வேண்டும்.

(ஊ) இத்துணை விதியின் கீழ் அதிகாரப்படுத்தப்படும் திகதிக்கு இத்துணை விதிக்கு உற்படுகின்றதும் தற்போதைய வியாபாரம் சம்பந்தமாக மேலே I, II, III, IV, V பிரிவின் கீழ் தூரங்களின் அளவு இல்லாத சுற்றாடல் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய திட்டம் பற்றி குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொண்டு தலைவரினால் தேவையான கட்டளைகளை விதிக்க முடியும். அத் தீர்மானம் பற்றி திருப்தியடையாத சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி ஆணையாளரிடத்தில் முறையீடு செய்யலாம். அவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(எ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்கு உரிய எல்லா கட்டமைப்புகளும் நீர் ஆதாரம், கிணறு அல்லது நீர் வழிக்கு குறைந்தபட்சம் 15 மீற்றர் தூரத்திலாவது அமைந்திருக்க வேண்டும்.

(ஏ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடல் மிருக உணவும் மாமிச செயலாக்க இடமாகும் போது இயந்திர உபகரணங்களினால் ஏற்படுகின்ற ஒலி பொது மக்களுக்கு பீடை அற்ற வகையில் கொண்டு நடாத்துவற்கு தகுந்த உத்திகளை பயன்படுத்தி இருத்தல் வேண்டும்.

(ஐ) உரிய சுற்றாடலில் உருவாக்குகின்ற கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக கழிவு நீர் செல்வதற்கான குழியிற்கு இட வேண்டியதுடன் எவ்வாறாயினும் மத்திய அளவிலான பண்ணையாகும் போது வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை ஜீவ வாயு கூற்றிற்கு இட்டு சுத்தம் செய்ய வேண்டியதுடன், பெரிய அளவிலான பண்ணையாகும் போது ஜீவ வாயு கூற்றிற்கு அனுப்புதல் அல்லது கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி மூலம் சுத்தம் செய்ய வேண்டும்.

(ஒ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்கு உரிய சுற்றாடலில் கட்டமைப்பு மழையினால் அல்லது வேறு வகையில் நீர் கசிவுகளை அல்லது நீர் கலக்காது இருக்க வேண்டியதுடன், சுற்றாடலினுள் கழிவு நீர் செல்வதற்காக போதியளவில் மூடப்பட்ட வடிகால்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஓ) உரிமப்பத்திரத்திற்காக எல்லா சுற்றாடல்களும் பெரிய அளவிலான பண்ணையாகும் போது, விஹாரை அல்லது வேறு சமய நிலையங்கள், பாடசாலை, வைத்தியசாலை இத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் தீர்மானிக்கப் படுகின்ற பொது இடத்தில் இருந்து குறைந்த பட்சம் 300 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்க வேண்டியதுடன், மத்திய அளவில் மற்றும் சிறு அளவிலான பண்ணையாகும் போது 200 மீற்றராதல் வேண்டும்.

(ஔ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரதாரியிற்கு உரிய சுற்றாடலினுள் வடிகால்கள் வேறு சுற்றாடலுக்கு அல்லது பொது வடிகால்களுக்கு அல்லது இயற்கையான நீர் வழிக்கோ தொடர்புபடாத வகையில் உரிய சுற்றாடலில் கழிவு நீர் செல்வதற்கான குழி அல்லது உறிஞ்சப்படும் குழியிற்கு தொடர்புபடுத்தி இருக்க வேண்டியதுடன், இன்னும் பன்றிகள் இருக்கும் தாங்கியினை கொன்கிறீட் இட்டு கண்ணாடி ஓடு பதித்து இருத்தல் வேண்டும்.

(க) உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடலில் போதியளவிலான நீர் நிலைகளில் நீரினை ஒன்று சேர்க்கும் இயலுமையும், வெளியில் இருந்து நீரினைப் பெற்றுக் கொள்ளும் போது போதியளவில் நீரினை சேமித்து வைக்கும் வசதியுடையது என்பது பற்றியும் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

9. 4 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா உரிமப்பத்திரங்களும் இத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யாத போது உரிய உரிமப்பத்திரத்தினை வழங்கப்பட்ட ஆண்டில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவுறும்.

10. உரிமப்பத்திரம் கிடைக்கப்பெற்ற எல்லா சுற்றாடல்களும்,

(அ) மிருகத்தினை வளர்ப்பதற்கு போதியளவிலான வசதியுடனான சுற்றாடலாக இருத்தல் வேண்டும்.

(ஆ) உருவாகின்ற கழிவுப் பொருட்களை முறையாக அகற்ற வேண்டியதுடன், உரிய சுற்றாடலில் நாற்றத்தினை தடுப்பதற்காக பொருத்தமான முறையினை பின்பற்றி இருத்தல் வேண்டும்.

(இ) தற்போதுள்ள வடிகால்களை அன்றாடம் பராமரிக்க வேண்டியதுடன், நீர் தங்கி இருக்காத வகையில் நீர் வசதியாக வழிந்தோடக் கூடிய வகையில் ஒழுங்கமைத்து இருத்தல் வேண்டும்.

(ஈ) சுற்றாடலில் இரந்து அகற்றப்படுகின்ற எந்தவொரு கழிவுப் பொருளையும் பசளைக்காக உபயோகிக்க முடிந்ததுடன் அதனை உபயோகிப்பதற்காக குறிப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட குழியில் இட்டு புதைக்க வேண்டியதுடன், எச்சந்தர்ப்பத்திலும்

அதனை சுற்றாடலில் திறந்த நிலத்தில் இட்டு பராமரித்தலாகாததுடன், இந்த உப பிரிவின் கீழ் வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை நீர் நிலையில் இருந்து குறைந்த பட்சம் 30 மீற்றர் தூரத்தில் எக் காரணம் கொண்டு புதைக்கக் கூடாது.

(உ) பன்றி பண்ணையில் இருந்து வெளிப்படுகின்ற கழிவுப் பொருட்களை குழுவின் மேற்பார்வையினால் வழங்கப்படும் ஆலோசனைப்படி அழித்தல் சட்டரீதியானதாகும். அது போன்று பன்றி பண்ணையில் உருவாகின்ற கழிவுப் பொருட்களை வேறு காணிக்கு இடுவதாயின் அவ்வாறு இடுவது செயற்பாட்டு திட்டம் 7 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டுக் குழுவின் பரிந்துரையின் படி தலைவரினால் உரிமப்பத்திரதாரியிற்கு கட்டளையிடலாம்.

(ஊ) பணியாற்றுகின்ற எல்லா பணியாளர்களும் சுகாதார கருவிகளை பயன்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு பயன்படுத்துவதாக உரிமப்பத்திரதாரி பொறுப்பேற்றல் வேண்டும்.

(எ) பணியாற்றுகின்ற பணியாளர்களுக்காக போதியளவில் மலசல கூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அவை யாவும் ஆரோக்கியமான பாதுகாப்புடன் பராமரித்தல் வேண்டும்.

(ஏ) ஜீவ வாயு காரணமாக வாயு வெளியேறுமாயின், வெளியேற்றுகின்ற வாயுவின் நச்சு பண்பினை தரத்திற்கு அமைய விடுவித்தல் வேண்டும்.

(ஐ) பணியாற்றுகின்ற பணியாளர்களுக்குத் தொற்றுகின்ற அல்லது ஆபத்தான நோயினால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவ்வாறான ஆபத்தான நோய் அல்லது தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பேணிக்காக்க வேண்டிய காலத்தினுள் உதவியாளராக இருந்தவராக இருத்தலாகாது.

(ஒ) பன்றிகள் உணவிற்காக கொண்டு வருகின்ற எச்சில் உணவுகள் அல்லது மிருக பகுதிகளை களஞ்சியப்படுத்துவதற்காக விசேட வசதிகளை வழங்காத போது ஒரு தினத்திற்கு மேற்பட்ட நாட்களுக்கு வைத்திருத்தலாகாததுடன், அவற்றைக் கொண்டு செல்லும் போது மூடப்பட்ட கொள்கலன்களில் இட்டுக் கொண்டு செல்ல வேண்டும்.

(ஓ) பணியாளர்களுக்காக உணவு சமைத்தல் அது போன்று உணவு நுகர்விற்கான இடங்களை உகந்தவாறு நல்ல பராமரிப்புடன் கொண்டு நடாத்தல்.

(ஔ) இறைச்சி ஒழுங்கமைப்பதற்கான சுற்றாடலாகும் போது இறைச்சி ஒழுங்கமைப்பதற்காக பயன்படுத்துகின்ற உபகரணங்கள் மற்றும் கருவிகளை சுகாதார பாதுகாப்புடன் பராமரிக்க வேண்டியதுடன், ஒழுங்கமைக்கப்பட்ட இறைச்சியினை களஞ்சியப் படுத்தல் மற்றும் பொதியில் இடலுக்காக குறித்த தரத்தினால் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(க) நோயினால் இறக்கின்ற மிருகங்களை அழிக்க வேண்டியதுடன் அதற்காக விசேடமான இடத்தினை உரிய சுற்றாடலில் கொண்டு நடாத்த வேண்டியதுடன் இறந்த உடலை அதாவது கழிவுப் பொருளை அகற்றுவதற்கான இடம் மிருக கூட்டில் இருந்து குறைந்த பட்சம் 100 அடி தூரத்தில் கட்டமைக்க வேண்டியதுடன், நிலையான தரத்தின் படி ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

(கா) அவ்விடம் சுற்றாடலினுள் தொற்று நோய்கள் தொற்றுவதனை தடுத்தல் மற்றும் தெருவில் திரிகின்ற விலங்குகளை கட்டுப்படுத்துவதற்காக தகுந்த வழிமுறைகளை பின்பற்ற வேண்டியதுடன், நாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்காக தகுந்த வழிமுறைகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

(கி) தொற்று நோயின் போது மிருக மருத்துவ நிபுணர், மிருக வைத்தியர் மற்றும் தலைவரினால் வழங்கப்படும் பரிந்துரையினை செயற்படுத்த வேண்டியதுடன், எச் சந்தர்ப்பத்திலும் மிருகத்தின் பகுதிகளை அல்லது எவ்வித கழிவுப் பொருட்களையும் பாதையில், கால்வாயில், குட்டையில், அல்லது இங்கு 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் தீர்மானிக்கின்ற பொது இடங்களில் அல்லது தனிப்பட்ட இடங்களில் இடலாகாது.

(கீ) மிருக கழிவுப் பொருட்கள் அல்லது மிருக பாகங்களை அகற்றுதல் அல்லது அழிப்பதற்காக திறந்தவெளியில் எரிக்கலாகாது.

(கு) பன்றிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள மருந்து ஊசி உரியவாறு பெற்றுக் கொடுத்து அவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்டது பற்றிய சான்றிதழ் தேவை ஏற்படும் எச் சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிப்பதற்கு வைத்திருத்தல் வேண்டும்.

(கூ) இயற்கையாகவே இறக்கின்ற மிருகங்களின் இறைச்சியினை விற்பனை செய்வது எவ்விதத்திலும் செய்யலாகாது.

(கெ) உரிமப்பத்திரம் பெற்ற எந்த சுற்றாடலிலும் மிருகங்களை வெட்டுவதற்கான கட்டளைச் சட்டத்தின் படி உரிமப்பத்திரம் இன்றி மிருகங்களை வெட்டலாகாது.

11. சபை அதிகாரப் பிரிவில் உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடல் ஒன்றினை இத் துணை விதியின் நிபந்தனைகளுக்கு அமைய கொண்டு நடாத்தப்படுகின்றதா என்று பரிசீலிப்பதற்காக சாதாரணமாக மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரையினுள் அல்லது பரிசீலிப்பதற்கான தேவைக்கேற்ப எந் நேரத்திலும் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இத் துணை விதியின் உரிமப்பத்திரத்திற்கு உரிய சுற்றாடலிற்கு நுழைதல் தகவல்களை கோருதல், ஆவணங்களை பரிசீலித்தல் சட்டரீதியானதாகும்.

12. உரிமப்பத்திரம் பெற்ற சுற்றாடலினுள் இத் துணை விதியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு நேர்மாறாக நடவடிக்கை மேற்கொள்வதாக தலைவர் திருப்தியடைகின்ற சந்தர்ப்பத்தில் துணை விதிக்கு அமையும் வண்ணம் அறிவித்தல் மூலம் துணை விதிக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த காலத்தினை உரிமப்பத்திரதாரியிற்கு வழங்கப்பட வேண்டும்.

13. இத்துணை விதியில் 12 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவித்தலுக்கமைய உரிமப்பத்திரதாரியினால் அதற்கு உட்படுவதற்காக மேலதிக காலத்தினை பெற்றுத் தருமாறு தலைவரிடத்தில் கோரப்படுமாயின், அதற்காக மேலதிக காலம் வழங்க இயலுமானதுடன், அது துணை விதி அதிகாரப்படுத்தப்படும் நாட்களில் 180 நாட்களடங்கிய காலத்திற்கு மேற்படாத காலமாதல் வேண்டும்.

14. தலைவரினால் இத்துணை விதியின் கீழ் செய்யப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய உரிமப்பத்திரதாரி இணங்காத போது மற்றும் மேலும் துணை விதியில் ஏதாவதொரு பிரிவினை மீறி நடவடிக்கை மேற்கொள்ளும் போது தலைவரினால் அதற்குரிய உரிமப் பத்திரத்தினை இரத்து செய்தல் சட்டரீதியானதாகும்.

15. இத்துணை விதியில் எந்தவொரு பிரிவினையோ மீறுவது குற்றமாவதுடன், அக் குற்றம் பற்றி அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியானதுடன் பின்பு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவினால் தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. இத்துணை விதியின் கீழ் உரிமப்பத்திரத்திற்கு உட்பட்ட சுற்றாடலில் இருந்து அதிகாரப் பிரிவினுள் அல்லது அதன் வெளியில் எந்தவொரு சுற்றாடலில் பன்றிகளை கொண்டு செல்பவர்கள் பி.ப. 6.00 மணி தொடக்கம் மு. ப. 6.00 வரையிலான காலத்தினுள் மாத்திரம் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரத்தின் மூலம் கொண்டு செல்வதற்கு வழங்கப்படும் கால நேரம் பி. ப. 6.00 மணி தொடக்கம் மு. ப. 6.00 வரை ஆகும்.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்திற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் சபையினால் காலத்திற்குக் காலம் முன்மொழியப்பட்ட தீர்மானத்தினால் அறிவிக்கப் படுகின்ற கட்டணமாக இருத்தல் வேண்டும்.

17. இத்துணை விதியில் வசனம் சம்பந்தமாக விளக்கம் தேவைப்பட்டால்,

**தலைவர்** என்பது பிங்கிரிய பிரதேச சபையின் தலைவரும்,

**சபை** என்பது பிங்கிரிய பிரதேச சபை என்றும்,

**அதிகாரமுற்ற உத்தியோகத்தர்** என்பது தலைவரினால் குறிப்பாக அதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் என்றும்,

**ஒருவர்** என்பது ஒரு நபர் அல்லது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத நபர்கள் அடங்கிய குழு என்றும்,

**வீட்டுப் பண்ணை** என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் இருக்கின்ற பன்றிகளின் எண்ணிக்கை 1 - 4 இடையிலான பண்ணை என்றும்,

***சிறு அளவிலான பண்ணை*** *என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் இருக்கின்ற பன்றிகளின் எண்ணிக்கை 5 - 24 இடையிலான பண்ணை என்றும்,*

***மத்திய அளவிலான பண்ணை*** *என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணனப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் உள்ள பன்றிகளின் எண்ணிக்கை 25 - 49 இடையிலான பண்ணை என்றும்,*

***பெரிய அளவிலான பண்ணை*** *என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணனப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் உள்ள பன்றிகளின் எண்ணிக்கை 50 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட பண்ணை என்றும் கருதப்படும்.*

***உரிய பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் பிரதிநிதி*** *என்பது தொழிலுக்கு உரிய அதிகார பிரிவிற்கு உரித்தாகின்ற பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரின் அதிகாரியின் பிரதிநிதி என்று கருதப்படும்.*

***பொது இடம்*** *என்பது ஏதாவதொரு பாதை, ஒழுங்கை, வீதி, குறுக்குத் தெரு, நடைபாதை, பொதுக் காணி, ஏதாவது ஒரு பாதுகாப்பு இடம், விளையாட்டு மைதானம், பொது கட்டிடம், பொதுக் கல்லறை, பேரூந்து தரிப்பிடம், புகையிரத நிலையம், கங்கை, கால்வாய், குட்டை, குளம், நீர் ஏரி, வடிகால்வாய், நீரோட்டம், மழைநீர் ஒன்று சேரும் இடம், கடற் கரை, சபைக்குரிய ஏதாவதொரு காணி, பொது மக்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசிற்குரிய காணி அல்லது பொது மக்களது பாவனைக்கு உள்ளாகின்ற எந்தவொன்றும் இதற்குரித்தாகும்.*

*18. இத்துணை விதியில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வசனங்களிடையே ஏதாவதொரு முரண்பாடுகள் ஏற்படுமாயின் சிங்கள மொழியின் வசனங்கள் அதிகாரப்படுத்தப்படும்.*

*உப அட்டவணை இலக்கம் I*

***பிங்கிரிய பிரதேச சபை***

**பன்றி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொதுச் சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியின் கீழான உரிமப்பத்திரம்**

*உரிமப்பத்திர இலக்கம் :* ..................................................

*01. உரிமப்பத்திரதாரியின் பெயர் :* ..................................................

*02. முகவரி :* ..................................................

*03. வியாபாரம் அமைந்துள்ள இடத்தின் முகவரி :* ..................................................

*04. அடையாளட்டை இலக்கம் :* ..................................................

*05. விண்ணப்பப்படிவ இலக்கம் :* ..................................................

*06. வழங்கப்பட்ட திகதி :* ..................................................

*07. செல்லுபடியாகும் காலம் :* ..................................................

*திகதி :* ...........................                                    ...........................

*தலைவர்,*
*பிரதேச சபை,*
*பிங்கிரிய.*

உப அட்டவணை இலக்கம் II

**பிங்கிரிய பிரதேச சபை**

**பன்றி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொதுச் சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியின் கீழ் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. வியாபாரம் : ..........................................................................................................................

2. வியாபாரம் அமைந்துள்ள இடத்தின் முகவரி : ...............................................................................

3. விண்ணப்பிக்கின்றவரின் பெயர் : ..................................................................................................

4. முகவரி : ..........................................................................................................

5. கிராம அலுவலர் பிரிவு : ..........................................................................................................

6. தொலைபேசி இல. : ..................................................................................................................

7. விண்ணப்பதாரி உரிமையாளர் அற்ற சந்தர்ப்பத்தில் : ........................................................................

உரிமையாளரின் பெயர் : ..................................................................................................................

முகவரி : ............................................................................................................

தொலைபேசி இலக்கம் : ...................................................................................

8. வியாபாரத்தினால் வளர்க்கப்படும் விலங்குகளின் எண்ணிக்கை : ......................................................................

9. அவ் இடத்தில் இறைச்சிக்காகவா / மிருகங்களை பெருக்குவதற்காகவா / மிருக உணவு தயாரிப்பதற்காகவா என்பது பற்றி : ..........................................................................................................................

..........................................................................................................................

10. சுற்றாடலினுள் இருக்க வேண்டிய கோழிகளின் எண்ணிக்கை : ................................................

11. சுற்றாடலுக்குரிய மொத்த நிலப்பரப்பு, (உறுதிப்படுத்துவதற்காக நில அளவையாளர் சான்றிதழின் பிரதி ஒன்று) கட்டமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட வரைபுத் திட்டத்தின் பிரதி ஒன்று, முன்னைய ஆண்டின் உரிமப்பத்திரத்தின் பிரதி ஒன்று (உரித்தாகும் போது) இணைப்பாக சமர்ப்பித்தல் வேண்டும்.

12. சுற்றாடலுக்கு வருகை தர வேண்டிய பாதை : ..........................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும், எனது வியாபாரத்திற்காக கட்டணம்

அறவிட்டு உரிமப்பத்திரம் வழங்குமாறும், பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்துடன் கையொப்பமிட்டு வாக்குறுதியளிக்கின்றேன்.

திகதி : ...........................  ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

---

**குழுவின் பரிந்துரை**

கௌரவ தலைவர்,
பிங்கிரிய பிரதேச சபை.

கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

நிபந்தனைகள்/பரிந்துரைக்காததற்கான காரணம்

..............................................................................................................................................
..............................................................................................................................................

குழுவின் தலைவர் : .......................................
குழுவின் உறுப்பினர்கள் : .................................
...............................................................
...............................................................
...............................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் படி இவ் இடத்தில் ..................................................... வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்றும், ............................................... ஆண்டிற்கு உரிய இத் துணை விதிக்கு அமைய உரிமப்பத்திரத்தின் கீழ் வியாபாரம் ஒன்று இங்கு நடாத்தப்படுவது என்றும், அதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா ............................................... என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ...........................  ............................................
வருமான பரிசோதகர்/வருமான நிருவாகி.

---

கௌரவ தலைவர்,
பிங்கிரிய பிரதேச சபை.

பரிந்துரைத்து அனுமதிக்கு சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : ...........................  ............................................
செயலாளர்

---

செயலாளர்,
பிங்கிரிய பிரதேச சபை.

அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை.

திகதி : ...........................  ............................................
தலைவர்

10 - 393

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 126 (IX) ஆம் பிரிவினால் பிங்கிரிய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் படி உரிய பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள கோழி வளர்ப்பு காரணமாக பொது மக்கள் முகம் கொடுத்துள்ள இன்னல்களை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியினை 2019.03.12 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்ட இல. 05-11 (ஆ) இற்கான முன்மொழிவினை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் பிரதேச சபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின்படி உரிய துணை விதி, வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜயரத்ன பண்டார ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

பேசல ஜயரத்ன பண்டார,
வடமேல் மாகாண ஆளுநர்.

*ஆளுநர் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2019, ஒகத்து 20.*

**கோழி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதி**

1. *பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கோழி இறைச்சி மற்றும் முட்டை பெற்றுக் கொள்வதற்காக கோழிக் குஞ்சுகளை இனப்பெருக்க செய்வதற்காக, கோழிகளுக்கான உணவு தயாரிப்பதற்காக, கோழி இறைச்சி தயாரிப்பதற்கான இடங்களை பராமரித்தல் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக மற்றும் பொது தெருக்களில் கோழிகளை கொண்டு செல்வதனால் ஏற்படுகின்ற பொது மக்களின் பீடனையினை தடுப்பதற்காகவும் பொது மக்களின் சுகாதாரத்தினை பேணுவதற்காக ஏற்பாடுகள் செய்ய இத் துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.*

2. *1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 (1) உடன் வாசிக்கப்பட வேண்டிய 126 (ix) பிரிவின் கீழ் இத் துணை விதி விதிக்கப்படும்.*

3. *இத் துணை விதி பிங்கிரிய பிரதேச சபையில் கோழி வளர்ப்புத் தொழிலினால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாப்பதற்கான துணை விதி என்று அறிமுகம் செய்யப்படும்.*

4. *பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கோழி இறைச்சி மற்றும் முட்டை பெற்றுக் கொள்வதற்காக கோழிக் குஞ்சுகளை இனப் பெருக்கம் செய்வதற்காக கோழிகளுக்கான உணவு தயாரிப்பதற்காக, கோழி இறைச்சி தயாரிப்பதற்கான இடங்களை பராமரிக்கும் எல்லோரும் இதற்காக இத் துணை விதியின் I ஆம் அட்டவணையின் கீழான உரிமப்பத்திரம் ஒன்றினை சபையின் தலைவரிடத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

5. *4 ஆம் பிரிவின் கீழான உரிமப்பத்திரத்திற்கான விண்ணப்பிக்கின்ற யாவரும் இத் துணை விதியில் II ஆம் அட்டவணைக்கு அமைய சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட மாதிரிப்படிவம் மூலம் விண்ணப்பிக்கலாம்.*

6. *இத் துணை விதியின் கீழான உரிமப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் சபையினால் காலத்திற்கு காலம் தீர்வு உடன்படிக்கை மூலம் தீர்மானித்து பிரகடனப்படுத்தப்படும் கட்டணமாக வேண்டும்.*

7. *இத் துணை விதியின் கீழான விதிகளை செயற்படுத்தல் பற்றி தலைவருக்கு ஆலோசனை மற்றும் பரிந்துரை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் உள்ளடங்கிய குழுவாக வேண்டும்.*

   (அ) *சபையின் செயலாளர் - தலைவர்*
   (ஆ) *சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்*

(இ) மிருக வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்
(ஈ) சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - குழுவின் உறுப்பினர்
(உ) சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் - குழுவின் உறுப்பினர்
(ஊ) உரிய பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் பிரதிநிதி ஒருவர் - குழுவின் உறுப்பினர்

8. 4 ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உரிமப்பத்திரத்திற்காக கோரிக்கை விடுக்கின்ற யாவரும் அதற்காக கீழ் காணப்படும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) உரிமப்பத்திற்காக கோரிக்கை விடுக்கின்ற சுற்றாடலுக்கு உரிய எல்லா கட்டமைப்புகளும் தலைவரினால் அனுமதிக்கப்பட்ட அனுமதியுடைய வரைபுத் திட்டத்திற்கு இணங்க கட்டப்பட்ட கட்டமைப்பாக இருக்க வேண்டும்.

(ஆ) கோழி கூட்டில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய கோழிகளின் எண்ணிக்கையினை தலைவரினால் தீர்மானிக்கும் போது இத் துணை விதியில் III ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விலங்கு வகையின் கீழ் ஒரு மிருகத்திற்கு சரியாக இருக்க வேண்டிய ஆகக் கூடிய சதுர அளவும் குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொண்டு தலைவரினால் குறிப்பிடப்படல் வேண்டும்.

(இ) எல்லா சுற்றாடல்களும் போதியளவிலான உயரத்தில் மூடப்பட்டிருக்க வேண்டியதுடன், அதற்குரிய உயரம் பற்றி தேவையான முடிவுகள் 7 ஆம் பிரிவின் கீழான குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொண்டு தலைவரினால் விதிக்கப்படுகின்ற உயரத்தில் அமைத்தல் வேண்டும்.

(ஈ) உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடலினுள் வியாபாரத்தினை அல்லது தொழிலுக்கான எல்லா கட்டமைப்புகளும் குறைந்தபட்ச தூரம் வீட்டிற்கு 15 மீட்டர் அளவிலான தூரத்தில் அமைத்தல் வேண்டும்.

(உ) உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடலினுள் கோழி கூட்டில் இருந்து அது அமைந்துள்ள காணியின் எல்லை வரையிலான குறைந்தபட்ச தூரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்.

I. சிறு அளவிளான பண்ணைக்காக கோழிக்கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 15 மீட்டராக வேண்டும்.

II. மத்திம அளவிலான பண்ணைகளுக்காக கோழி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 20 மீட்டராக வேண்டும்.

III. பெரிய அளவிலான பண்ணைகளுக்காக கோழி கூடுகளில் இருந்து காணியின் எல்லைக்கு குறைந்தபட்ச தூரம் 50 மீட்டராக வேண்டும்.

IV. சுற்றாடலினுள் இரண்டு கோழி கூடுகளுக்கிடையிலான இடைவெளி குறைந்த பட்சம் 6 மீட்டராக வேண்டும். என்றாலும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற மிருகங்களுக்கான போது 9 மீட்டர் இருக்க வேண்டும்.

V. உரிமப்பத்திரத்திற்காக எல்லா சுற்றாடல்களும் பெரிய அளவிலான பண்ணையாகும் போது பன்சல் அல்லது வேறு சமய இடங்கள், வைத்தியசாலையோ அல்லது இத்துணை விதியில் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் தீர்மானிக்கின்ற பொது இடங்களில் இருந்து குறைந்த பட்சம் 300 மீட்டர் தூரத்தில் அமைய வேண்டியதுடன், மத்திம அளவிலானதும் சிறு அளவிலானதுமான பண்ணையாகும் போது 200 மீட்டராக வேண்டும்.

(எ) இத் துணை விதியின் கீழ் அதிகாரப்படுத்தப்படும் திகதிக்கு இத் துணை விதிக்கு உட்படுகின்றதும் தற்போதைய வியாபாரம் சம்பந்தமாக மேலே (உ) I, II, III, IV, V பிரிவின் கீழ் தூரங்களின் அளவு இல்லாத சுற்றாடல் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய திட்டம் பற்றி குழுவின் பரிந்துரையினை கவனத்தில் கொண்டு தலைவரினால் தேவையான கட்டளைகளை விதிக்க முடியும். அத் தீர்மானம் பற்றி திருப்தியடையாத சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி ஆணையாளரிடத்தில் முறையீடு செய்யலாம். அவரின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

(ஏ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்கு உரிய எல்லா கட்டமைப்புகளும் நீர் ஆதாரம், கிணறு அல்லது நீர் வழிக்கு குறைந்தபட்சம் 15 மீட்டர் தூரத்திலாவது அமைந்திருக்க வேண்டும்.

(உ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்குரிய சுற்றாடல் மிருக உணவும் மாமிச செயலாக்க இடமாகும் போது இயந்திர உபகரணங்களினால் ஏற்படுகின்ற ஒலி பொது மக்களுக்கு பீடை அற்ற வகையில் கொண்டு நடாத்துவதற்கு தகுந்த உத்திகளை பயன்படுத்தி இருத்தல் வேண்டும்.

(ஊ) உரிய சுற்றாடலில் உரவாக்குகின்ற கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக கழிவு நீர் செல்வதற்கான குழியிற்கு இட வேண்டியதுடன் அந் நீர் நன்கு முத்திரையிட்டு இருத்தல் வேண்டும்.

(ஐ) விண்ணப்பிக்கின்ற உரிமப்பத்திரத்திற்கு உரிய சுற்றாடலில் கட்டமைப்பு மழையினால் அல்லது வேறு வகையில் நீர்க் கசிவுகள் அல்லது நீர் கலக்காது இருக்க வேண்டியதுடன், சுற்றாடலினுள் கழிவு நீர் செல்வதற்காக போதியளவில் மூடப்பட்ட வடிகால்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஒ) விண்ணப்பிக்கின்ற உரிமைப்பத்திரத்திற்கு உரிய சுற்றாடலினுள் வடிகால்கள் வேறு சுற்றாடலுக்கு அல்லது பொது வடிகால்களுக்கு அல்லது இயற்கையான நீர் வழிக்கோ தொர்புபடாத வகையில் உரிய சுற்றாடலில் கழிவு நீர் செல்வதற்கான குழி அல்லது உறிஞ்சப்படும் குழியிற்கு தொடர்புபடுத்தி இருத்தல் வேண்டும்.

9. 4 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா உரிமப்பத்திரங்களும் இத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் இரத்து செய்யாத போது உரிய உரிமப்பத்திரத்தினை வழங்கப்பட்ட ஆண்டில் திசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவுறும்.

10. உரிமப்பத்திரம் கிடைக்கப் பெற்ற எல்லா சுற்றாடல்களும்,

(அ) உருவாகின்ற கழிவுப் பொருட்களை முறையாக அகற்ற வேண்டியதுடன், உரிய சுற்றாடலில் நாற்றத்தினை தடுப்பதற்காக பொருத்தமான முறையினை பின்பற்றி இருத்தல் வேண்டும்.

(ஆ) தற்போதுள்ள வடிகால்களை அன்றாடம் பராமரிக்க வேண்டியதுடன், நீர் தங்கி இருக்காத வகையில் நீர் வசதியாக வழிந்தோடக் கூடிய வகையில் ஒழுங்கமைத்து இருத்தல் வேண்டும்.

(இ) கோழிகளை இடப்பட்டுள்ள இடங்களினுள் உள்ள உமிகளை சுத்தம் செய்து அகற்றும்போது அவற்றை பசளைக்காக அகற்ற முடிந்ததுடன், எச் சந்தர்ப்பத்திலும் அவற்றை சுற்றாடலில் திறந்த நிலத்தினுள் நீரில் நனையும் வகையில் குவியலாக இருக்கலாகாது. பண்ணையில் இருந்து வெளியேற்றப்படுகின்ற வரையில் மூடப்பட்ட பைகளில் மாத்திரம் இட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) கோழிகளை இடப்பட்டுள்ள இடங்களில் உமிகளை அகற்றி சுற்றாடலின் வெளியில் இடாது சுற்றாடலினுள்ளே பயன்படுத்தப்படுமாயின், பயன்படுத்தப்பட வேண்டிய முறையினை இத் துணை விதியின் குழுவினது பரிந்துரையினை அடிப்படையாக கொண்டு தலைவரினால் விதிக்கப்படுகின்றவாறு அமைதல் வேண்டும்.

(உ) பணியாற்றுகின்ற எல்லா பணியாளர்களும் சுகாதார கருவிகளை பயன்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு பயன்படுத்துவதாக உரிமப்பத்திரதாரி பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) பணியாற்றுகின்ற பணியாளர்களுக்காக போதியளவில் மலசல கூட வசதி வழங்கப்பட்டிருக்க வேண்டியதுடன், அவை யாவும் ஆரோக்கியமான பாதுகாப்புடன் பராமரித்தல் வேண்டும்.

(எ) ஏதாவதொரு தயாரிப்பின் செயற்பாட்டினால் வாயு வெளியேறுமாயின், வெளியேற்றுகின்ற வாயுவின் நச்சு பண்பினை நீக்கி விடுவித்தல் வேண்டும்.

(ஏ) பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு தொற்றுகின்ற அல்லது ஆபத்தான நோயினால் பாதிக்கப்பட்டவர் அல்லது அவ்வாறான ஆபத்தான நோய் அல்லது தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பேணிக்காக்க வேண்டிய காலத்தினுள் உதவியாளராக இருந்தவராக இருக்கலாகாது.

(ஐ) முட்டைக்காக கோழிகளை வளர்க்கும் இடமாயின் தயாரிக்கப்படுகின்ற உடைந்த முட்டைகளை வெளியேற்ற வேண்டியதுடன் முட்டைகளில் சாணம் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் பூசிப்படும் வகையில் முட்டைகளை வைத்திருத்தல் அல்லது களஞ்சியப்படுத்தலாகாததுடன், அவற்றை சுத்தம் செய்து உகந்தவாறு அடுக்கி வைத்தல் வேண்டும்.

(ஒ) பணியாளர்களுக்காக உணவு சமைத்தல் அது போன்று உணவு நுகர்விற்காக உகந்த இடத்தினை நல்ல பராமரிப்புடன் கொண்டு நடாத்தல்.

(ஓ) இறைச்சி ஒழுங்கமைப்பதற்கான சுற்றாடலாகும் போது இறைச்சி ஒழுங்கமைப்பதற்காக பயன்படுத்துன்ற உபகரணங்கள் மற்றும் கருவிகளை சுகாதார பாதுகாப்புடன் பராமரிக்க வேண்டியதுடன், ஒழுங்கமைக்கப்பட்ட இறைச்சியினை களஞ்சியப்படுத்தல் மற்றும் பொதியில் இடலுக்காக குறித்த தரத்தினால் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(ஔ) பழுதடைந்த முட்டைகள் மற்றும் இறக்கின்ற எல்லா கோழிகளையும் அழிக்க வேண்டியதுடன், அதற்காக விசேடமான இடத்தினை சுற்றாடலினுள் கொண்டு நடாத்தப்பட வேண்டும். அதற்காக விசேடமான இடத்தினை வாயு வெளியேறாது அடைக்கப்பட்ட கழிவு குழியாக சுற்றாடலினுள் பராமரிக்க வேண்டியதுடன், அது குடியிருக்கும் வீட்டில் இருந்து 15 மீட்டர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். கழிவுக் குழி, நீர் மூலத்தில் இருந்து 15 மீட்டர் தூரத்தில் குறைந்தபட்சம் அமைந்திருத்தல் வேண்டும்.

(க) சுற்றாடலினுள் தொற்று நோய்கள் தொற்றுவதனை தடுத்தல் மற்றும் தெருவில் திரிகின்ற விலங்குகளை கட்டுப்படுத்துவதற்காக தகுந்த வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

(கா) மிருக கழிவுப் பொருட்கள் அல்லது மிருக பாகங்களை அகற்றுதல் அல்லது அழிப்பதற்காக திறந்த வெளியில் எரிக்கலாகாது.

(ட) தொற்று நோயின் போது மிருக மருத்துவ நிபுணர், வைத்தியர் மற்றும் தலைவரினால் வழங்கப்படும் பரிந்துரையினை செயற்படுத்த வேண்டியதுடன, எச் சந்தர்ப்பத்திலும் மிருகத்தின் பகுதிகளை அல்லது எவ்வித கழிவுப் பொருட்களையும் பாதையில், கால்வாயில், குட்டையில், பொது இடங்களில் அல்லது தனிப்பட்ட இடங்களில் இடலாகாது.

(டா) சுற்றாடலினுள் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை மற்றும் மிருக பகுதிகளை மூடிவைக்க கூடிய ஒரு பாத்திரத்தில் இட்டு அல்லது அதற்காக அமைக்கப்பட்ட மூடக்கூடிய கொள்கலனில் அன்றி திறந்த சுற்றாடலில் வைத்தல் அல்லது ஒன்று சேர்த்தலாகாது.

11. சபை அதிகாரப் பிரிவில் உரிமப்பத்திரத்திற்குறிய சுற்றாடல் ஒன்றினை இத் துணை விதியின் நிபந்தனைகளுக்கு அமைய கொண்டு நடாத்தப்படுகின்றதா என்று பரிசீலிப்பதற்காக சாதாரணமாக மு.ப. 6.00 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணி வரையினுள் அல்லது பரிசீலிப்பதற்கான தேவவைக்கேற்ப எந் நேரத்திலும் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இத் துணை விதியின் உரிமப்பத்திரத்திற்கு உரிய சுற்றாடலிற்கு நுழைதல் தகவல்களை கோருதல், ஆவணங்களை பரிசீலித்தல் சட்ட ரீதியானதாகும்.

12. உரிமப்பத்திரம் பெற்ற சுற்றாடலினுள் இத் துணை விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு நேர்மாறாக நடவடிக்கை மேற்கொள்வதாக தலைவர் திருப்தியடைகின்ற சந்தர்ப்பத்தில் துணை விதிக்கு அமையும் வண்ணம் அறிவித்தல் மூலம் துணை விதிக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த காலத்தினை உரிமப்பத்திரதாரியிற்கு வழங்கப்பட வேண்டும்.

13. இத் துணை விதியில் 12 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவித்தலுக்கமைய உரிமப்பத்திரதாரியினால் அதற்கு உற்படுவதற்காக மேலதிக காலத்தினை பெற்றுத் தருமாறு தலைவரிடத்தில் கோரப்படுமாயின், அதற்காக மேலதிக காலம் வழங்க இயலுமானதுடன், அது துணை விதி அதிகாரப்படுத்தப்படும் நாட்களில் 180 நாட்களடங்கிய காலத்திற்கு மேற்படாத காலமாதல் வேண்டும்.

14. தலைவரினால் இத் துணை விதியின் கீழ் செய்யப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய உரிமப்பத்திரதாரி இணங்காத போது மற்றும் மேலும் துணை விதியில் ஏதாவதொரு பிரிவினை மீறி நடவடிக்கை மேற்கொள்ளும் போது தலைவரினால் அதற்குரிய உரிமப்பத்திரத்தினை இரத்து செய்தல் சட்டரீதியானதாகும்.

15. இத் துணை விதியில் எந்தவொரு பிரிவினையும் மீறுவது குற்றமாவதுடன், அக் குற்றம் பற்றி அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியானதன் பின்பு 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவினால் தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. இத் துணை விதியின் கீழ் உரிமப்பத்திரத்திற்கு உற்பட்ட சுற்றாடலில் இருந்து அதிகாரப் பிரிவினுள் அல்லது அதன் வெளியில் எந்தவொரு சுற்றாடலில் கோழிகளை கொண்டு செல்பவர்கள் பி.ப. 6.00 மணி தொடக்கம் மு.ப. 6.00 வரையிலான காலத்தினுள் மாத்திரம் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

17. இத் துணை விதியில் வசனம் சம்பந்தமாக விளக்கம் தேவைப்பட்டால்,

உரிய பிரதேசத்தில் பிரதேச செயலகம் என்பது தொழிலுக்கு உரிய அதிகார பிரதேசத்திற்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரும்,

**தலைவர்** என்பது பிங்கிரிய பிரதேச சபையின் தலைவரும்,

**சபை** என்பது பிங்கிரிய பிரதேச சபை என்றும்,

**தகுந்த பொருள்** என்பது செங்கல்லினால் அல்லது வேறு சாந்து பூசப்பட்டு அல்லது எஸ்பஸ்டட் அல்லது வேறு ஏதாவதொரு தகடினால் அல்லது வேறு விசேடமாக தயாரிக்கப்பட்ட பொருட்களினால் என்றும்,

**கோழி** என்பது முட்டைக்காக அல்லது இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற கோழியும், சேவல்,

**அதிகாரமுற்ற உத்தியோகத்தர்** என்பது தலைவரினால் குறிப்பாக அதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் என்றும்,

**ஒருவர்** என்பது ஒரு நபர் அல்லது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத நபர்கள் அடங்கிய குழு என்றும்,

**சிறு அளவிலான பண்ணை** என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணபிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை 50 - 1000 இடையிலான பண்ணை என்றும்,

**மத்திய அளவிலான பண்ணை** என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை 1001 - 2499 இடையிலான பண்ணை என்றும்,

**பெரிய அளவிலான பண்ணை** என்பது உரிமப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கை 2500 ற்கு அல்லது அதற்கு மேற்பட்ட பண்ணை என்றும்,

**உரிய பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் பிரதிநிதி** என்பது தொழிலுக்கு உரிய அதிகார பிரிவிற்கு உரித்தாகின்ற பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரின் அதிகாரியின் பிரதிநிதி என்று கருதப்படும்.

**பொது இடம்** என்பது ஏதாவதொரு பாதை, ஒழுங்கை, வீதி, குறுக்குத் தெரு, நடைபாதை, பொதுக் காணி, ஏதாவது ஒரு பாதுகாப்பு இடம், விளையாட்டு மைதானம், பொது கட்டிடம், பொது கல்லறை, பேருந்து தரிப்பிடம், புகையிரத நிலையம், கங்கை, கால்வாய், குட்டை, குளம், நீர் ஏரி, வடிகால்வாய், நீரோட்டம், மழைநீர் ஒன்று சேறும் இடம், கடற்கரை, சபைக்குரிய ஏதாவதொரு காணி, பொது மக்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசிற்குரிய காணி அல்லது பொது மக்களது பாவனைக்கு உள்ளாகின்ற எந்தவொன்றும் இதற்குரித்தாகும்.

18. இத் துணை விதியில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின் சிங்கள மொழி உரையே மேலோங்கும்.

உப அட்டவணை இலக்கம் I

**பிங்கிரிய பிரதேச சபை**

**கோழி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியின் கீழான உரிமப்பத்திரம்**

உரிமப்பத்திர இலக்கம் : ..................................................

01. உரிமப்பத்திரதாரியின் பெயர் : ..................................................

02. முகவரி : ..................................................

03. வியாபாரம் அமைந்துள்ள இடத்தின் முகவரி : ..................................................

04. அடையாள அட்டை இலக்கம் : ..................................................

05. விண்ணப்பப்படிவ இலக்கம் : ........................................................................................................

06. வழங்கப்பட்ட திகதி : ........................................................................................................

07. செல்லுபடியாகும் காலம் : ........................................................................................................

திகதி : ..........................

..........................
தலைவர்,
பிரதேச சபை,
பிங்கிரிய.

உப அட்டவணை இலக்கம் II

**பிங்கிரிய பிரதேச சபை**

**கோழி வளர்ப்புத் தொழில் காரணமாக பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பீடனையினை தடுத்தல் மற்றும் பொது சுகாதாரத்தினை பாதுகாத்தல் பற்றிய துணை விதியின் கீழ் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்கான உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்.**

1. வியாபாரம் : ........................................................................................................

2. வியாபாரம் அமைந்துள்ள இடத்தின் முகவரி : ........................................................................................................

3. விண்ணப்பிக்கின்றவரின் பெயர் : ........................................................................................................

4. முகவரி : ........................................................................................................

5. கிராம அலுவலர் பிரிவு : ........................................................................................................

6. தொலைபேசி இல. : ........................................................................................................

7. விண்ணப்பதாரி சுற்றாடலில்/காணி உரிமையாளர் அற்ற சந்தர்ப்பத்தில் : ........................................................

உரிமையாளரின் பெயர் : ........................................................................................................

முகவரி : ........................................................................................................

தொலைபேசி இலக்கம் : ........................................................................................................

8. வியாபாரத்தினால் வளர்க்கப்படும் விலங்குகளின் எண்ணிக்கை : ........................................................

9. அவ் கோழிகளை இறைச்சிக்காகவா/முட்டைக்காகவா/கோழிகளை பெருக்குவதற்காக/மிருக உணவு தயாரிப்பதற்காகவா என்பது பற்றி : ........................................................................................................

10. சுற்றாடலினுள் இருக்க வேண்டிய ஆகக் கூடிய கோழிகளின் எண்ணிக்கை : ..............................................

11. சுற்றாடலுக்குரிய மொத்த நிலப்பரப்பு, (உறுதிப்படுத்துவதற்காக நில அளவையாளர் சான்றிதழின் பிரதி ஒன்று) கட்டமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட வரைபுத் திட்டத்தின் பிரதி ஒன்று, முன்னைய ஆண்டின் உரிமப்பத்திரத்தின் பிரதி ஒன்று (உரித்தாகும் போது) குத்தகைப் பத்திரம் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ் பத்திரத்தினை இணைக்க வேண்டும்.

12. சுற்றாடலுக்கு வருகைதர வேண்டிய பாதை : ..........................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும், எனது வியாபாரத்திற்கான கட்டணம் அறவிட்டு உரிமப்பத்திரம் வழங்குமாறும், பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்துடன் கையொப்பமிட்டு வாக்குறுதியளிக்கின்றேன்.

திகதி : ..........................

............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**குழுவின் பரிந்துரை**

கௌரவ தலைவர்,
பிங்கிரிய பிரதேச சபை.

கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

நிபந்தனைகள்/பரிந்துரைக்காததற்கான காரணம்

..........................................................................................................................................
..........................................................................................................................................

குழுவின் தலைவர் : ......................................
குழுவின் உறுப்பினர்கள் : ................................
..............................................................
..............................................................
..............................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் படி இவ் இடத்தில் ..................................................... வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்றும், ............................................... ஆண்டிற்கு உரிய இத் துணை விதிக்கு அமைய உரிமப் பத்திரத்தின் கீழ் வியாபாரம் ஒன்று இங்கு நடாத்தப்படுவது என்றும், அதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா ............................................... என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..........................

............................................
வருமான பரிசோதகர்/வருமான நிருவாகி.

கௌரவ தலைவர்,
பிங்கிரிய பிரதேச சபை.

பரிந்துரைத்து அனுமதிக்கு சமர்ப்பிக்கின்றேன்.

திகதி : ...........................                                   .............................................
செயலாளர்

---

செயலாளர்,
பிங்கிரிய பிரதேச சபை.

அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை.

திகதி : ...........................                                   .............................................
தலைவர்

உப அட்டவணை இலக்கம் III

கோழிக் கூடுகளுக்கு பறவைகளை இடும் போது பயன்படுத்த வேண்டிய குறைந்த பட்ச இடங்களின் அளவு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குஞ்சுகள் | ஒரு குஞ்சுக்காக 0.5 சதுர அடிகள் (0.05 சதுர மீட்டர்) தொடக்கம் 01 சதுர அடி (0.09 சதுர அடி) ஆகும். |
| வளர்கின்ற கோழிகள் | ஒரு குஞ்சுக்காக 01 சதுர அடிகள் (0.09 சதுர மீட்டர்) தொடக்கம் 1.5 சதுர அடி (0.14 சதுர மீட்டர்) ஆகும். |
| முட்டை இடும் கோழிகள் | ஒரு குஞ்சுக்காக 02 சதுர அடிகள் (0.19 சதுர மீட்டர்) தொடக்கம் 3.0 சதுர அடி (0.28 சதுர மீட்டர்) ஆகும். |
| இனப்பெருக்க கோழிகள் (முட்டை இடுகின்ற) | ஒரு குஞ்சுக்காக 02 சதுர அடிகள் (0.19 சதுர மீட்டர்) தொடக்கம் 3.0 சதுர அடி (0.28 சதுர மீட்டர்) ஆகும். |
| இனப்பெருக்க கோழிகள் (புரொய்லர்) | ஒரு குஞ்சுக்காக 03 சதுர அடிகள் (0.28 சதுர மீட்டர்) தொடக்கம் 3.5 சதுர அடி (0.33 சதுர அடி) ஆகும். |
| புரொய்லர் | ஒரு குஞ்சுக்காக 0.8 சதுர அடிகள் (0.07 சதுர மீட்டர்) தொடக்கம் 01 சதுர அடி (0.11 சதுர அடி) ஆகும். |

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையிலுள்ள பதவிகளுக்கு*
*ஆட்சேர்ப்பு செய்தல் - 2019*

**விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியினைத் திருத்தம் செய்தல்**

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் விவசாய போதனாசிரியர் தரம் III, கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான அறிவித்தல் 2,142 ஆம் இலக்க, 2019.09.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் மாகாண சபைப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2019.10.04 என குறிப்பிடப்பட்டிருப்பினும் அத்திகதி 2019.10.31 ஆந் திகதி என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.*

*அதனடிப்படையில், குறிப்பிட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் ''2019.10.04'' என குறிப்பிடப்பிடுள்ள அனைத்து இடங்களும் ''2019.10.31'' ஆந் திகதி என திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்* www.psc.cp.gov.lk *எனும் உத்ததியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*எம்.ஜீ.ஏ. திலகரத்ன,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,*
*மதிதிய மாகாண சபை.*

*மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,*
*இல 244, கடுகஸ்தோட்டை வீதி,*
*கண்டி,*
*2019, ஒற்றோபர் 01.*

*10-574*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.–*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2019***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2019 |
| | | வெள்ளி | 11.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2019 |
| | | வெள்ளி | 18.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2019 |
| | | வெள்ளி | 25.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2019 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2019 |
| | | வெள்ளி | 08.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2019 |
| | | வெள்ளி | 15.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2019 |
| | | வெள்ளி | 22.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2019 |
| | | வெள்ளி | 29.11.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2019 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2019 |
| | | வெள்ளி | 13.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2019 |
| | | வெள்ளி | 20.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2019 |
| | | வெள்ளி | 27.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2019 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.